1972 ஆகஸ்ட் 19]

நாட்டுடைமையாக்கப்பட்ட மண்டலங்களில் பேருந்துகள் ஓட்டுவது

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் : மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நாட்டுடைமையாக்கப்பட்ட மண்டலங்களில் பேருந்துகள் ஓட்டுவது குறித்து தமிழ்நாடு அரசு, மைசூர் அரசுப் பிரதிநிதிகளிடையே எவையேனும் பேச்சுவார்த்தைகள் நடத்தப் பட்டனவா ?

(இ) ஆமெனில், அவை குறித்த விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (அ) ஆம்.

(இ) ஓர் வரைவு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கின்றது. இவ்வொப்பந்தம் அரசு ஆணை எண் 1649 உள்துறை, தேதி 20—6—1972-ல் எதிர்ப்பு ஏதேனும் இருந்தால் 26—7—1972-க்குள் இவ்வொப்பந்தத்திற்கு மறுப்போ அன்றி ஆலோசனைகளோ இருப்பின் தெரிவிக்குமாறு கோரி, வெளியிடப்பட்டது. சில போக்குவரத்து உரிமையாளர்கள் தங்கள் மறுப்புகளை தெரிவித்திருக்கிறார்கள். இவைகள் அரசின் பரிசிலனையிலுள்ளன. இம்மறுப்புகளின் பேரில் முடிவெடுத்தவுடன், இவ்வரைவு ஒப்பந்தம் உறுதி செய்யப்படும்.

Impounding of buses by the Police.

*115 *Q.*—THIRU K. RAJARAM (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether the Police impounded a number of buses in this State about 14th January 1972; and

(b) if so, the details thereof?

காவல் துறை கைப்பற்றிய பேருந்துகள்

திரு. கே. ராஜாராம் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1972 ஜனவரி 14 ஆம் நாள் அளவில் இம்மாநிலத்திலுள்ள பல பேருந்துகளைக் காவல் துறை கைப்பற்றி வைத்துக் கொண்டதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) பயணிப்பேருந்துகளாகத் தவறான முறையில் பயன் படுத்தப்பட்ட ஒப்பந்த ஊர்திகள் சோதனையிடப்பட்டு கைப்பற்றி வைக்கப்பட்டன.

Services of Prosperity Brigade for the Pallava Transport Corporation

*116 Q.—THIRU K. RAJARAM (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether the Pallava Transport Corporation, Madras City, has requisitioned the services of the Prosperity Brigade to assist it;

(b) if so, the details thereof ; and

(c) whether any payment is made to the Prosperity Brigade by the Corporation?

பல்லவா போக்குவரத்துக் கழகத்திற்கு சீரணிப் படையினரின் பணி

திரு. கே. ராஜாராம் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரிலுள்ள பல்லவா போக்குவரத்துக் கழகம் தனக்கு உதவி புரியுமாறு சீரணிப் படையினரின் பணியைக் கேட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

(உ) சீரணிப் படையினருக்கு பல்லவா போக்குவரத்துக் கழகத்தால் சம்பளம் ஏதும் கொடுக்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) பேருந்து நிறுத்துமிடங்களில், பயணிகள் வரிசையை முறைப்படுத்தவும், அங்கு வரும் பேருந்துகளில், பயணிகள் வரிசையாக ஏறுகின்றனரா என்று கவனித்துக் கொள்வதற்காகவும், சீரணிப் படையினர் பயன்படுத்தப்படுகின்றனர்.

(உ) அவர்களுக்குப் பணி புரியும் நாளொன்றுக்கு ரூ. 3 படி வழங்கப்படுகிறது.